வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 03/2018

எனது இல:NP/07/10/02/117
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
25.01.2018

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத்தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாணப் பொதுச் சேவையின் அலுவலகப் பணியாளர் சேவையில் தரம் III, II மற்றும் Iஇல் உள்ளவர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை – 2016 (I) (2018)**

மேற்படி பதவியில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது அப்பதவிக்குரிய தற்போது நடைமுறையிலுள்ள சேவைப் பிரமாணக்குறிப்பின் பந்தி 09ற்கு அமைவாக 2018 ஆம் ஆண்டு **பங்குனி** மாதம் நடாத்தப்படும்.

2.0 இப்பரீட்சை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் நகரங்களின் பெயர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காமை அல்லது வேறு காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்து அடுத்துள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றுவதற்கான தற்றுணிபு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரைச் சார்ந்திருக்கும். விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3.0 **தகைமைகள் :**

- குறித்த பதவியின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அச்சேவையின் குறித்த வகுப்புக்களில் நியமனமொன்றை/ பதவியுயர்வினைப் பெற்றுள்ள அலுவலர்கள் கீழ்வரும் அடிப்படையில் விண்ணப்பிக்கலாம்.
  - * தரம் IIIஇல் கடமையாற்றும் அலுவலர்கள் 1வது வி.தி.காண் தடைப்பரீட்சையிற்கும்,
  - * தரம் IIஇல் கடமையாற்றும் அலுவலர்கள் 2வது வி.தி.காண் தடைப்பரீட்சையிற்கும்,
  - * தரம் Iஇல் கடமையாற்றும் அலுவலர்கள் 3வது வி.தி.காண் தடைப்பரீட்சை என்ற அடிப்படையிலும் விண்ணப்பிக்கலாம்.
- இதுவரை இப்பரீட்சையினை சித்தியெய்திராத அலுவலர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்களாவர்.
- ஓர் அலுவலர் பதவி வகிக்கும் தரத்திற்குரிய வினைத்திறமை காண் தடைப்பரீட்சைக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

4.0 **விண்ணப்பப் படிவம்**

- விண்ணப்பமானது இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக **2018.02.20**ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

- விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வடக்கு மாகாண பொதுச்சேவையின் அலுவலகப் பணியாளர் சேவையின் தரம் III,II மற்றும் Iஇல் உள்ளவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை –2016 (I) (2018)"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

5.0 ***பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-*** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பரீட்சைக்கும் பரீட்சகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (Passport)

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதாவதொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சகருக்கு உண்டு.

6.0 ***விண்ணப்பங்கள் :-*** விண்ணப்பத்தின் இல 1 முதல் 6 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் கணினியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் முன்னோட்டப் பிரதி என்பன அனுப்பிவைத்தலாகாது என அறிவுறுத்தப்படுகிறது.
மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

7.0 ***பரீட்சைக் கட்டணம்***

**7.1** முதன் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின் போது அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 200/-ஐ ஏதாவது அஞ்சல் அலுவலகம் ஒன்றில் **“செயலாளர், மாகாணபொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்”** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தில்** மாற்றக்கூடியவாறான காசுக்கட்டளையைப் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் கழராதவாறு இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

**7.2** இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

8.0 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை பரீட்சகருக்குத் தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் அது பற்றி பின்வரும் விபரங்களுடன் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்திய காசுக்கட்டளையின் உறுதிப்படுத்திய பிரதி,
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No),

9.0 இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்ற அலுவலர்களை, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

10.0 உத்தியோத்தர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

11.0 பரீட்சைக் விண்ணப்பித்துள்ள சகல பரீட்சார்த்திகளினது பெறுபேறுகளும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

**12.0 பரீட்சைத் திட்டம்.**

**12.1** அலுவலகப் பணியாளர் தரம் III இல் உள்ளவர்களுக்கான 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் போது அலுவலகப் பணியாளர்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் வாய்மொழிப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படும்.

- குறித்த பணியாளர் தான் பணிபுரியும் அமைச்சினால் / திணைக்களத்தினால் ஒப்படைக்கப்படும் பணிகள் தொடர்பில் தேவைக்கு ஏற்றவாறு அறிவைப் பெற்றுள்ளாரா என்பதை அளவிடுதல். **(30 புள்ளிகள்)**
- வழமையான அலுவலக முறை மற்றும் தாபன நிர்வாக முறைகள் தொடர்பில் தனது சேவையுடன் தொடர்புடைய அறிவு. **(30 புள்ளிகள்)**
- அவருக்கு ஒப்படைக்கப்பட்ட பல்வேறு பணிகள் தொடர்பில் போதிய அறிவையும் தேர்ச்சியையும் பெற்றுள்ளாரா என்பதை அளவிடுதல். **(40 புள்ளிகள்)**

**12.2** அலுவலகப் பணியாளர் தரம் II இல் உள்ளவர்களுக்கான 2வது வினைத்திறமை காண் தடைப் பரீட்சையின் போது அலுவலகப் பணியாளர்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் வாய்மொழிப் பரீட்சையின்போது பரீட்சிக்கப்படும்.

தரம் III இல் உள்ளவர்களுக்கான வினைதிறமைகாண் தடைப் பரீட்சையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய வகையில் பூர்த்தி செய்துள்ள சேவைக் காலத்தினுள் உரிய துறையில் ஏற்பட்டுள்ள நடைமுறை ரீதியான, சட்டரீதியான திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பில் பணியாளரின் அறிவையும் அவரது பணிகளுடன் தொடர்புடைய நவீனமயப்படுத்தல்கள் தொடர்பில் கொண்டுள்ள திறமைகளையும் அளவிடுதல்.

**(100 புள்ளிகள்)**

*(12.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் புள்ளிகள் கணக்கிடப்படும்.)*

**12.3** அலுவலகப் பணியாளர் தரம் I இல் உள்ளவர்களுக்கான 3வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் போது அலுவலகப் பணியாளர்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் வாய்மொழிப் பரீட்சையின்போது பரீட்சிக்கப்படும்.

தரம் III மற்றும் தரம் II இல் உள்ளவர்களுக்கான வினைதிறமைகாண் தடைப்பரீட்சையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய வகையில் பூர்த்தி செய்துள்ள சேவைக் காலத்தினுள் உரிய துறையில் ஏற்பட்டுள்ள நடைமுறை ரீதியான, சட்டரீதியான திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பில் பணியாளரின் அறிவையும் அவரது பணிகளுடன் தொடர்புடைய நவீனமயப்படுத்தல்கள் தொடர்பில் கொண்டுள்ள திறமைகளையும் அளவிடுதல்.

**(100 புள்ளிகள்)**

*(12.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் புள்ளிகள் கணக்கிடப்படும்.)*

13.0 இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின்/ திணைக்களங்களின்/ அலுவலகத்தின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் இத்தகவல்களை வடமாகாண இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-** இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும் என்பதுடன் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலங்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் தமிழ் மொழியே மேலோங்குதல் வேண்டும்.

**சி.ஏ.மோகன்ராஸ்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.
*2018.01.25*